## கிராமப்புறங்களில் ஆன்மிக-பண்பாட்டு வளர்ச்சிக்காக நூலகங்களுக்கு

# ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் வழங்கும் திட்டம்

அன்புடையீர் வணக்கம்.

தொண்டுள்ளம் படைத்தவர்களே! கடந்த 86 வருடங்களாக ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் (ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் தமிழ் மாதப் பத்திரிகை) தன்னம்பிக்கையையும் தெய்வ நம்பிக்கையையும் மக்களுக்கு வழங்கி வரும் அரிய பணியைச் செய்து வருகிறது; குறிப்பாக, இளைஞர்களின் மனங்களில் சிறந்த கருத்துக்களை வேரூன்றச் செய்து, அவர்களைப் பண்பட்டவர்களாக்கி, பயனுள்ளவர்களாக்கும் பணியையும் மேற்கொண்டுள்ளது.

ஆக்கபூர்வமான இப்பணியினைக் கிராமங்களுக்கும் மற்றும் சிறு நகரங்களுக்கும் எடுத்துச் செல்லத் திட்டமிட்டுள்ளோம். தமிழக கிராமப்புறப் பள்ளி / கல்லூரிகளில் உள்ள குறைந்தது 5000 நூலகங்களுக்கு ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தை இலவசமாக வழங்கத் திட்டமிட்டுள்ளோம். இப்பணிக்காகத் தாங்கள் தாராளமாக நன்கொடை அளித்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| பத்து ஆண்டுகளுக்குப் பிரதிகள் வழங்கத் தேவையான நன்கொடை | பயனடையும் நூலகங்களின் எண்ணிக்கை |
|---|---|
| ரூ. 1,000 | 2 |
| ரூ. 5,000 | 10 |
| ரூ. 10,000 | 20 |
| ரூ. 25,000 | 50 |
| ரூ. 50,000 | 100 |
| ரூ. 1,00,000 | 200 |
| US $ 115 | 10 |
| US $ 1,150 | 100 |

நன்கொடையாளர்களின் பெயர் விவரங்கள் ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தில் வெளியிடப்படும். நன்கொடையினை ரூபாய் / காசோலை / டி.டி.யாக மேற்கூறிய முகவரிக்கு அனுப்பலாம்.

தங்களது நன்கொடையினைத் தாங்கள் பயின்ற பள்ளி / கல்லூரியின் வளர்ச்சிக்காகவோ அல்லது தங்களது வாழ்வின் உன்னதமான நாள் / மற்றும் நபர்களின் சார்பாகவோ / நினைவாகவோ அளிக்கலாம்.

இவ்வாறு உதவுவதன் மூலம் தாங்கள் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள், மாணவர்களின் கல்வி, ஆன்மிக வளர்ச்சிக்கு காரணமாகும் புண்ணியவான்களாக ஆவீர்கள் என்பதில் ஐயமில்லை.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறேன்.

உங்கள் நன்கொடைக்கு 80-ஜி பிரிவின் கீழ் வருமான வரிச்சலுகை உண்டு.

**சுவாமி கௌதமானந்தர்,**
தலைவர்